Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓம்

ஸ்ரீ வித்யா மந்திர் அசோசியேஷன்

சிவாஜி நகர், சேலம்-636 003.

ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீசாரதா பீடம் ஜகத்குரு

ஸ்ரீ பாரதீ தீர்த்த ஸ்ரீ ஸந்நிதானம்

அவர்களின் அருளுரை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ஸ்ரீ அபிநவ வித்யா
தீர்த்த ஸ்வாமிகள்

ஸ்ரீ பாரதீ தீர்த்த
ஸ்ரீ ஸந்நிதானம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ॐ

பதிப்புரை

அத்யாத்ம வித்தையைப் பயின்று அதன் குன்றின் மேலேறி நின்று உலகிற்குச் சேவை செய்த ரிஷிகள், முனிகள், ஆன்மீகவாதிகளின் பாரம்பர்யம்தான் நம் பாரதிய பாரம்பர்யம். இந்த பாரதிய பாரம்பர்யத்தை, நாகரீகத்தைக் காப்பாற்றுவது ஸ்ரீ வித்யா மந்திர் நிறுவனத்தாரின் கல்வி கொள்கைகளில் சாலச் சிறந்த ஒன்றாகும்.

கலைகள் பலவுங்கற்று அத்யாத்ம வித்தையிலும் சிறந்து விளங்குகிற ஸ்ரீ ஜகத்குருக்கள், சந்நியாசிகள், ஆன்மீக-வாதிகள் எல்லோரையும் ஸ்ரீ வித்யா மந்திர் நிறுவனத்தார் அவ்வப்பொழுது எல்லா பள்ளிகளுக்கும் அழைத்து வந்து தங்களது பள்ளிச் சிறுவர்களுக்கு குருவருளும் திருவருளும்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கிடைக்குமாறு செய்து வருகிறார்கள். பல பள்ளிகளுக்கு அஸ்திவாரம் நாட்டியவர்களிலும், புதிய கட்டிடங்களைத் திறந்து வைத்தவர்களிலும் ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு சங்கராச் சாரியார் ஸ்ரீ மஹா சந்நிதானம், ஸ்ரீ சந்நிதானம், காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.

சென்ற ஆண்டு ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு சாரதா பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ சந்நிதானம் ஸ்ரீ பாரதி தீர்த்த ஸ்வாமிகள் சேலம் விஜயம் செய்த பொழுது, கொண்டலாம்பட்டி ஸ்ரீ வித்யா மந்திர் புதிய கட்டிடத்திற்கு அடிக்கல்நாட்டினார்கள். ஸ்ரீசந்நிதானத்தின் ஹஸ்த விசேஷத்தால் குறுகிய காலத்திற்குள் சுமார் 12 லட்ச ரூபாய் செலவில் கம்பீரமான புதிய கட்டிடம் கட்டி முடித்து, தற்சமயம் 450 மாணவ மாணவியர்கள் அங்கு கல்வி பயில்கிறார்கள். ஸ்ரீ சந்நிதானம் அவர்கள் அடிக்கல் நாட்டு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விழாவில் செய்த அனுக்கிரஹபாஷணமும், மற்ற ஸ்ரீ வித்யா மந்திர் பள்ளிக்கூடங்களுக்கு விஜயம் செய்து ஆற்றிய அருளுரைகளும் அவ்வப்பொழுது ஒலிப்பதிவு செய்யப்பட்டு பின், வரி வடிவில் இப்புத்தக ரூபமாக அவரது ஆசியால் இப்பொழுது வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த அனுக்கிரஹ பாஷணங்களை எல்லா மாணவர்களும் திரும்பத்திரும்ப படித்து குருவருள் பெற்று பயனடைய வேண்டும் என்பது எங்களது அவா.

இங்ஙனம்,
சேலம் ஸ்ரீ வித்யா மந்திர் அசோஷியேஷன் நிர்வாகிகள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இடம் :

ஸ்ரீ வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி

கொண்டலாம்பட்டி, சேலம்.

நாள்: 6-1-1988

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

शरदिन्दु विकास मन्दहासां
स्फुरदिन्दीवर लोचनाभिरामाम् ।
अरविन्द समान सुन्दराश्यां
अरविन्दासन सुन्दरीमुपासे ।।

ஸரதிந்து விகாஸ மந்தஹாஸாம்
ஸ்புரதிந்தீவர லோசனாபிராமாம்!
அரவிந்த சமான சுந்தராஸ்யாம்
அரவிந்தாஸன சுந்தரீமுபாஸே!!

மனிதன் தன்னுடைய வாழ்க்கையிலே சுகத்தையும், துக்கத்தையும் அனுபவித்துக்கொண்டு இருக்கிறான். இந்த இரண்டும் ஏதோ ஒரு காரணத்தினாலேதான் உண்டாகிறது. எந்தக் காரணமும் இல்லாமல் இது வருவதற்கு அவகாசமே இல்லை என்கிறது சாஸ்திர சித்தாந்தம். இந்த இரண்டுக்கும் என்ன காரணம் என்றுகேட்டால் புண்ணியம், பாவம் என்கிற

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இரண்டுதான் காரணம். சுகத்திற்கு காரணமானது புண்ணியம்; துக்கத்திற்கு காரணமானது பாவம். மனுஷ்யனுடைய விருப்பம் எப்பவும் சுகத்தில்தான் இருக்கும்; துக்கத்திலே யாருக்கும் விருப்பம் இருக்காது. ஆகையினாலே சுகத்திலே விருப்பம் இருக்கக் கூடியவன் அந்த சுகத்திற்கு ஹேதுவான புண்ணியத்தை அவசியம் செய்ய வேண்டும். துக்கத்திலே விருப்பம் இல்லாததினாலே அந்த துக்கத்தைக் கொடுக்கக் கூடிய பாவத்தை என்றைக்கும் செய்யக்கூடாது. இது நம்முடைய ஸநாதன தர்மத்திலே அடிப்படையாகச் சொல்லக்கூடிய விஷயம். இந்த விஷயத்தை நாம் தெரிந்து கொண்டால்தான் மேற்கொண்டு நம்முடைய வாழ்க்கையை நடத்துவது என்பதை தீர்மானம் செய்ய முடியும். ஆகையினாலே பிரதி வர்த்தனும்கூட சிறுவயதிலே இருந்து தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம். நம்முடைய ஜீவிதத்திலே நல்ல பணிகளைத்தான் நாம் செய்யவேண்டும். சின்ன, சின்ன குழந்தைகள்கூட தெரிஞ்சுக்க வேண்டிய விஷயம் இது. நாம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எப்படியும் நல்ல காரியத்தைச் செய்யவேண்டும்; தப்பிதங்களைச் செய்யக்கூடாது. ஏன் என்று கேட்டால் நாம் தப்பிதம் செய்தால் நம்முடைய வாத்தியார் நம்ப பேர்ல கோபித்துக் கொள்வார். இரண்டாவது ஆத்திலே அப்பா, அம்மா கோபித்துக் கொள்வார். மூன்றாவது, நாம் எப்பொழுதும்தப்பிதங்களைச்செய்துகொண்டுஇருந்தால்பரீட்சையிலே பெயில் ஆகி விடுவோம். இந்த மூன்று பயங்களும் குழந்தைகளுக்கு இருந்துவிட்டால் அவர்கள் தப்பிதங்களைச் செய்யமாட்டார்கள். தப்பிதம், தப்பிதம் என்றால் என்ன? இன்னொருத்தனுக்கு தொந்தரவு செய்யப்போனால் அது பெரிய தப்பிதம். தன்னுடைய காரியத்தை தான் சரியாகச் செய்யவில்லை என்று சொன்னால் அது பெரிய தப்பிதம். குழந்தைகள் இதை நன்றாகத்தெரிந்துகொள்ள வேண்டும். உங்களுக்கு எதைச் செய்யனும் என்று வாத்தியார் சொல்றாரோ அதை தப்பாமல் செய்துவிட வேண்டும். இன்னொருத்தனுக்கும்ட்டும்என்னிக்குமே தொந்தரவுசெய்யக்கூடாது. அப்பதான்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நீங்கள் நல்ல பிரஜைகள் ஆக முடியும்; நன்றாக முன்னுக்கு வர முடியும். ஆகையினாலே மனிதனுடைய ஜீவிதத்திலே புண்ய காரியத்திற்குத்தான் பிராதான்யம். பாவ காரியத் திற்கு என்னிக்குமே அவகாசம் கொடுக்கக்கூடாது என்கிறது தான் முக்கியமான விஷயம். புண்ணியகாரியம்என்கிறபோது எவ்வளவோ இருக்கு. அவன் அவனுடைய சக்தியை அனு சரித்து அவன் புண்ணிய காரியங்களை, தர்ம காரியங்களைச் செய்யனும் என்று சாஸ்திரம் சொல்கிறது. இப்பேர்ப்பட்ட ஒரு பெரிய தர்ம காரியத்தைச் செய்யவேண்டி இருந்தால், அதுக்கு ஏற்ற சக்தி இருக்கிறவன் ஆக இருக்கனும். அந்தச் சக்தி இருக்கிறபோது அந்த தர்மத்தை செய்யவில்லை என்று சொன்னால் அதிலும் நியாயம் இருக்காது. சக்தி இல்லாத வனுக்குப் பெரிய காரியங்களைச் செய்யச் சொல்லவில்லை. ஆனால் சக்தி இருக்கிறவன் அவசியம் இந்த மாதிரி காரியங் களைச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் பகவான் அவனுக்குக் கொடுத்த சக்திக்கும், ஐஸ்வர்யத்துக்கும் ஸார்த்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தைக்யம் உண்டாகும். அது இல்லை என்று சொன்னால் நமக்கு எவ்வளவு ஐஸ்வர்யங்கள் இருந்தாலும், நமக்கு எவ்வளவு சௌகர்யங்கள் இருந்தாலும் நம்மால் ஒரு தர்ம காரியமும் நடக்கவில்லை என்று சொன்னால், அந்த ஐஸ்வர்யத்தை, அந்த சௌகர்யத்தை வைத்துக்கொண்டு என்ன பண்றது? நமக்கு இருக்கக்கூடிய சக்தியை, சௌகர்யத்தை பரோபகாரத்திற்காக, லோக க்ஷேமத்திற்காக விநியோகம் செய்த போதுதான் நாம் விவேகிகள் என்று சொல்லப்படறோம். இந்த ஒரு மனசு பிரதி ஒருத்தனுக்கும் அவசியம் இருக்க வேண்டும். அவன் அவனுடைய சக்தியை அனுசரித்து, அவன் தர்மங்களை அனுஷ்டிக்க வேண்டும். புண்ணிய காரியத்தைச் செய்யவேண்டும். இந்த இடத்திலே ஒரு பள்ளிக்கூடம் நல்ல ரீதியிலே கட்டி, அங்கே நம்முடைய பாரதிய சம்ஸ்கிருதிக்கு தகுந்த ரீதியிலே மாணவர்களுக்கு வித்யாப்யாஸத்திற்கு அவகாசம் ஏற்படுத்த வேண்டும் என்கிற பவித்திரமான எண்ணத்தினாலே நீங்கள் செய்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இந்த சங்கல்பத்தை நான் மிகவும் சிலாகிக்கிறேன். பகவானுடைய கிருபையினாலே இந்த இடத்தில் உங்கள் சங்கல்ப அனுகாரமாக பெரியகட்டிடம் வரட்டும். அந்த கட்டிடத்தில் அநேகம் பேர் மாணவர்கள் வித்யாப்யாஸம் செய்து நம்முடைய சநாதன பரம்பரையைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டு நம் பாரதத்தில் உத்தமமான பிரஜைகளாக விளங்கட்டும். இந்த நிர்வாகிகளுக்கும், அத்யாபகர்களுக்கும், இந்த மாணவர்களுக்கும் பகவான் எப்பவும் ஸத்பிரேரணையைத் தந்து, இவர்கள் எல்லோரையும் காப்பாற்றட்டும் என்று நான் பகவானைப் பிரார்த்தித்து இந்த நாலு வார்த்தைகளை இங்கு முடிக்கின்றேன்.

"ஹர நம: பார்வதீ பதயே-ஹர ஹர மஹாதேவ"

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இடம் :

ஸ்ரீ வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி

ஆனந்தாஸ்ரமம், சேலம்.

நாள்: 7-1-1988

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

शरदिन्दु विकास मन्दहासां स्फुरदिन्दीवर लोचनाभिरामाम् ।
अरविन्द समान सुन्दराश्यां अरविन्दासन सुन्दरीमुपासे ।।

நம்முடைய பாரத தேசத்திலே எத்தனையோ பேர் மஹான்களாகப் பிறந்தார்கள், ஒவ்வொருத்தர் ஒவ்வொரு விஷயத்திலே மஹனீயர். அநேக பக்தர்கள், அநேக தியாகிகள், அநேக வித்வான்கள். இன்னும் அநேக விதமாக தேசத்துக்கு உபகாரம் செய்த மஹான்கள் பிறந்த இடம் இந்த பாரத தேசம். இந்த எல்லா மஹான்களிலும் மிகச் சிறந்த மஹான் என்று சொன்னால், ஆதி சங்கர பகவத் பாதாள். பகவத் பாதர் இந்த உலகத்திலே இருந்தது கேவலம் முப்பத்திரண்டு வருஷம். ஆனால் அந்த முப்பத்திரண்டு வருஷத்திலே அவர் செய்த காரியம் மட்டும், எத்தனை நூற்றாண்டுகள் இருந்தாலும், ஒரு மனுஷன் செய்யமுடியாத காரியத்தைச் செய்தார். நீங்கள் இத்தனை நாழி கேட்டுக் கொண்டு இருந்தீர்கள், பாரதீய சம்ஸ்கிருதி, சம்ஸ்கிருதி என்று ஜோஸ்யருடைய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வாயிலே நம்முடைய பாரதீய சம்ஸ்கிருதி ஒரு காலத்திலே அத்யந்த க்ஷீணமாய் இருக்கக்கூடிய சமயத்திலே, அதைக் காப்பாற்றி நமக்கு அனுக்ரஹம் செய்தவர் ஆதிசங்கரர். அன்னிக்கு ஆதிசங்கரர் அவதரிக்கவில்லை என்று சொன்னால் இன்னிக்கு நாம் எல்லோரும், சநாதன தர்மம், பாரதிய சம்ஸ்கிருதி, நம்முடைய ஆசாரம் இதைப் பற்றிப் பேசக்கூடிய சந்தர்ப்பமே நமக்குக் கிடைத்திருக்காது. இப்படியாவது நாம் இன்னிக்கு ஒரு அளவுக்காவது நம்முடைய தர்மத்தைப் பற்றி நம் சம்ஸ்கிருதியைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறோம் என்று கேட்டால், இது கேவலம் அன்னிக்கு ஆதிசங்கரர் அவதாரம் செய்ததின் பலன். ஆகையினாலே, பாரதீய சம்ஸ்கிருதியைப் பற்றி மதிப்பு இருக்கக்கூடிய பிரதி வர்த்தனுக்கும், ஆதி சங்கரரைப்பற்றி அவசியம் சிரத்தையும், ஆதரவும், கௌரவமும் இருக்கவேண்டும். ஆதிசங்கரர் முழு பாரதத்தைச் சுற்றி பயணம் செய்தார். பிரதி வர்த்தனுக்கும் சன்மார்க்கத்தை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உபதேசம் செய்தார். அநேகம் பேர் நினைப்பார்கள் ஆதி சங்கரர் யாரோ சில பண்டிதர்களுக்கு வேண்டிய கிரந்தங்களை மட்டும் எழுதினார். அவர் பண்டிதர்களைமட்டும்தான் மனதில்வைத்து கொண்டார். சாதாரணமானவர்களைஅவர் யோசிக்கவே இல்லை என்று தப்பாக நினைப்பார்கள். ஆதி சங்கரர் திரு உள்ளம் அப்படியல்ல. முழு உலகத்திலே ஜனங்களுக்கு ஒரு சன்மார்க்கத்தை உபதேசம் செய்ய வேண்டும். எல்லோரும் தங்கள் வாழ்க்கையைப் பவித்திரமாக நடத்த வேண்டும். பிரதிவர்த்தனும் க்ஷேமத்தை அடையவேண்டும். என்பதுதான் அவருடைய பெரிய நோக்கம். அதற்காக அவர் காலத்திலே எவ்வளவோ தர்ம பிரசாரத்தை செய்தார். எவ்வளவோ கிரந்தங்களை அவர் எழுதினார். அதிசரளமாகவும் ஜனங்களுக்குப் புரியும்படியாகவும் அவர் கிரந்தங்களை எழுதினார். அவர் பிரதிவர்த்தனும் அனுசரிக்கக்கூடிய ஒரு உபதேசத்தை ரொம்ப அழகாக ஓர் இடத்தில் சொன்னார். இதைப்பார், நீ எந்த ஸ்திதியில் இருந்தாலும் ஒரு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நாலு விஷயங்களைச் சொல்றேன். இதை எப்பவும் ஞாபகத்திலே வைச்சுக்கோ என்று சொன்னார். அது என்ன வாம்? முதல் விஷயம் தினந்தோறும் கொஞ்சமாவது பகவத் கீதையைப் படி. நமக்கு எல்லோருக்கும்கூட பகவத் கீதை என்று சொன்னால் ஒரு அபாரமான சிரத்தையும், பக்தியும் ஏன்? சாக்ஷாத் பகவான் கிருஷ்ண பரமாத்மா நமக்கு சமஸ்த லோகத்துக்கும் அனுக்ரஹம் செய்த ஒரு பெரிய தத்வ கிரந்தம். அநேகம்பேர் கேப்பா உங்க இந்து சம்ஸ்கிருதியிலே, உங்க பாரதிய வேதாந்தத்திலே எல்லோருக்கும் படிச்சுக் கிறதுக்கு அவகாசம்இல்லையே அப்படீன்னு. பகவத்கீதையை ஒன்று நாம் சரியாகப் படி.த்தால், சரியாகப் பார்த்தால், புரிந்துகொண்டால் சமஸ்த வேதாந்தமும் பகவத் கீதையிலே யே அடங்கி இருக்கிறது. அதைவிட வேறு எதுவும் வேண்டிய தில்லை. முன்னோர்கள் கீதையைப் பற்றி ஒன்று சொல்லிக் கொண்டு இருந்தார்கள். (கீதா சகீதா கர்த்தவ்யா கிம் அந்யை: சாஸ்திர வித்தரை:) பகவத் கீதையைச் சரியாகப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

படித்தால் வேறு என்னதான் சாஸ்திரத்தைப் படிக்க வேண்டும்? அப்பேர்ப்பட்ட மஹிமையுள்ள பகவத் கீதையை பிரதிவர்த்தனும் தினந்தோறும் கொஞ்சமாவது படிக்க வேண்டும். அதேபோல் பகவானுடைய பவித்திரமான நாமத்தை உச்சாடனம் செய்ய வேண்டும். நாம் நமக்கு சமயம் கிடைக்கிறபோது நமக்கு பிரயோஜனமில்லாத விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே காலத்தைக் கழிக் கின்றோம். அந்தப் பேச்சுக்களால் என்ன பிரயோஜனம் என்று கேட்டால், ஒரு பிரயோஜனமும் கிடையாது. ஆனால் அதே சமயத்தை பகவானுடைய பவித்திரமான நாமோச் சாரணத்தில் கழித்தால் எவ்வளவு உபயோகமாகும்? பகவான் நாமத்திற்கு அபாரமான மஹிமை உண்டு.

பாகவதத்திலே ஒரு கதை. அஜாமிளன் என்ற பெரிய ராக்ஷசன். அவன் எவ்வளவோ தப்பிதங்களைச் செய்தான். அவன் பிள்ளைக்கு நாராயணன் என்ற பெயரை வைத்தான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கடைசியில் சரீரத்தை விடும் சமயத்தில் பகவானை நினைக்க வேண்டும் எனத் தோனவில்லை. பாசம் இருக்கிறதினாலே தன் பிள்ளையைப் பெயரி வைத்துக் கூப்பிட்டான்; நாராயணா என்று கூப்பிட்டான். பிராணனை விட்டான். அதற்காக அவனுக்குப் பகவானுடைய சாயுஜ்யம்கிடைத்தது. ஏன் என்றால் அவன் தெரிஞ்சோ, தெரியாமலோ நாராயணா என்கிறநான்குஅக்ஷரங்களை உச்சாரணம்செய்துபிராணனை விட்டான். அப்படி அவனுக்கு பகவத் சாயுஜ்யம் கிடைத்தது. நாம் தெரிஞ்சே பகவான் நாமத்தைச்சொன்னா இனி நமக்கு எவ்வளவு உத்கிருடஷ்மான பதவி கிடைக்க வேண்டும்? ஆகையினாலே உனக்கு கிடைக்கிற சமயத்தை பகவான் நமோச்சாரணத்தில் கழிக்க வேண்டும். அதே போன்று இன்னொரு உபதேசம் சொன்னார். நீ சஹவாசம் செய்கிற தாக இருந்தால் நல்ல மனுஷ்யாளுடைய சஹவாசம் செய். நல்ல மனுஷ்யாள் என்றால் யார்? யார் என்னிக்கும் இன்னொருத்தனுக்கு உபத்திரவம் செய்ய மாட்டார்களோ,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யார் எப்பவும் பரோபகாரிகளாக இருப்பார்களோ, யார் எப்பவும் பகவத் விஷயத்தில் பக்தி உள்ளவர்களாக இருப்பார்களோ, அவர்கள்தான் ஸத் புருஷர்கள்; அவர்களுடைய ஸஹவாசத்தை செய். உன்னுடைய ஜீவிதத்திலே உனக்கு முடிந்த அளவிற்கு இன்னொருத்தனுக்கு உதவி செய். பகவத் பாதர் சொன்ன நான்கு உபதேசங்கள் பிரதிவர்த்தனுக்கும் அன்வயிக்கக் கூடிய உபதேசங்கள். தினமும் கொஞ்சமாவது பகவத் கீதையைப் படி; பகவானுடைய நாமத்தை எப்பவும் சொல்; ஸத் புருஷர்களை ஸஹவாசம் செய்; முடிந்த அளவிற்கு பரோபகாரம் செய். இந்த உபதேசங்கள் சமஸ்த பிரபஞ்சத்துக்கும் சமஸ்த மக்களுக்கும் நன்மையைக் கொடுக்கக்கூடிய உபதேசங்கள். இப்பேர்ப்பட்ட எத்தனையோ உபதேசங்களை பகவத்பாத சங்கரர் நமக்கு அனுக்ரஹம் செய்தார். நம்பளை உத்தாரம் செய்தார். அப்பேர்ப்பட்ட பகவத்பாத சங்கரருடைய பரம்பரையில் வந்தவர். நமக்கு எல்லோருக்கும் அவருடைய உபதேசங்கள் சிரோதார்யம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மானது. நாம் பால்யத்தில் குழந்தைகளுக்குக்கொடுக்கக்கூடிய சிக்ஷணை இந்த அடிப்படையில் இருக்கவேண்டும். அவனுக்கு இருபத்தைந்து வயசு வந்ததுக்கு அப்புறம் பகவத் கீதையை பற்றிச் சொன்னால் அவன் என்ன நினைப்பான்? அவனுக்கு அந்த வயசு வந்ததுக்கு அப்புறம் நம்முடைய சமஸ்கிருதியைப் பற்றிச் சொல்லலாம் என்று சொன்னால் அவன் எங்கே கேட்கப் போகின்றான்? இந்த வயசில் இந்த அடிப்படையிலே நாம் குழந்தைகளுக்கு சிக்ஷணை, சிக்ஷணை என்று சொன்னால், Training என்று இங்கிலீஷிலே சொல்லுவா- அதை நாம் கொடுத்தால் அந்தக் குழந்தைகள் உத்தமமான பிரஜைகளாக வரும். அப்பேர்ப்பட்ட உத்தமமான பிரஜைகளால்தான் நம்முடைய சம்ஸ்கிருதி, நம்முடைய தர்மம் காப்பாற்றப்படும். அதற்காக நாம் முயற்சியைச் செய்ய வேண்டும். பிரதிவர்த்தனுக்கும் நம்முடைய சம்ஸ்கிருதியிலே இருக்கக்கூடிய சூக்ஷ்மங்களை, பகவத் பாதர் உபதேசம் செய்த இந்த சூக்ஷ்மங்களை நாம் சொல்லித்தர வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அதுதான் நம்முடைய ஆத்யமான கர்த்தவ்யம். அதற்காக பிரதிவரத்தனும் கூட ஆதிசங்கரரைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தஇடத்திலே இந்த வித்யா மந்திர் சிறியதாக ஆரம்பித்து இப்போ, இவ்வளவு பெரிதாக ஆனது இந்த நிர்வாஹிகளுடைய சிரத்தைக்கும் உத்ஸாஹத் துக்கும் பிரதிகமாக இருக்கிறது. நாம் எந்தக் காரியத்தைச் செய்கிறதாக இருந்தாலும், அதை முதலிலே கொஞ்சமாகத் தான் ஆரம்பிக்க வேண்டும். அது அப்படியே முன்னுக்குக் கொண்டு வரலாம். ஒரேயடியாக எல்லாத்தையும் ஒரே சமயத்திலே ஆரம்பிக்க வேண்டும் என்று சிலர் நினைப்பார் கள்; ஒன்றுமே நடக்காமல் அப்படியே இருக்கும். அப்பேர்ப் பட்ட சந்நிவேஸங்களையும் பார்த்துகொண்டே இருப்போம் அப்படி இருக்கிறபோது இந்தஇடத்திலே இந்த சம்ஸ்தையை கொஞ்சம் கொஞ்சமாக பெரியதாகிக்கொண்டு வருகிறது என்கிறது நமக்கு எல்லோருக்கும் ரொம்ப சந்தோஷத்தை உண்டாக்கக் கூடிய சமாசாரம். இன்றைய தினம். புதியதாக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நிர்மானம் செய்யப்பட்ட இந்த ஹாலைத் திறந்து வைக்கக் கூடிய ஒரு சந்நிவேஸம் ஏற்பட்டது என்கிறதுக்கும் நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன். இந்த ஹாலில் அநேக ஸத் காலக்ஷேபங்கள் நடக்கட்டும். வித்யார்த்திகளுக்குக்ஷேமங்கள் நடக்கட்டும். வித்யார்த்திகளுக்கு அத்யந்த உபயுக்தமான ஹாலாக இருக்க வேண்டும். இந்தப் பள்ளியில் வேலை செய்யக்கூடிய அனைவருக்கும் அத்யந்த சிரத்தா பக்தி களோடு செய்து தங்களுடைய கர்த்தவ்யத்தை மிகச்சிறந்த ரீதியில் நிர்வஹிக்கும்படி பகவான் அவர்களுக்கு அனுக்ரஹம் செய்யட்டும். இந்த பவித்ரமான காரியத்திலே ஈடுபட்ட பிரதிவர்த்தனருக்கும் பகவான் பரிபூர்ணமான கிருபையை கடாக்ஷிக்கட்டும். உங்கள் எல்லோருக்கும் என் ஆசீர்வாதங் களைத் தெரியப்படுத்தி இந்த பாஷணத்தை இங்கே முடிக்கின்றேன்.

"ஹர நம பார்வதீபதயே ஹர ஹர மஹாதேவ"

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இடம் :

ஸ்ரீ வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி

செவ்வாய்ப்பேட்டை, சேலம்-636 002.

நாள்: 8-1-1988

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

शरदिन्दु विकास मन्दहासां, स्फुरदिन्दीवर लोचनाभिरामाम् ।
अरविन्द समान सुन्दराश्यां अरविन्दासन सुन्दरीमुपासे ।।

(சரதிந்து விகாஸ மந்தஹாஸாம், ஸ்புரதிந்தீவர
லோசனாபிராமாம்!
அரவிந்த ஸமான சுந்தராஸ்யாம் அரவிந்தாஸன
சுந்தரீம் உபாஸே!!)

எல்லோரும் படிக்கிறோம். படிப்பிற்கு பலன் என்ன என்பதற்கு சாஸ்திரத்திலே சொல்லப்பட்ட பொறுப்பு என்னவென்றால் **विद्यया विनयावाप्तिः** (வித்யயா விநயா வாப்திः) என்பதாகும். எவ்வளவுக்கெவ்வளவு நாம் படிப் பிலே முன்னுக்கு வருகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நமக்குள்ள விநயம் என்பது உண்டாகவேண்டும். என்ன விநயம் என்று சொன்னால், பெரியோர்கள் விஷயத்தில் மதிப்பு, நாம் இன்னும் தெரிந்துகொள்ள வேண்டியவை அநேகம் இருக்கின்றன என்கிற பாவம், அஹங்காரம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இல்லாமல் இருப்பது போன்றனவாகும். நமக்கு என்ன வாயிற்றென்று கேட்டால், கொஞ்சம் படிப்பு ஜாஸ்தி வருகிறது என்றால் அஹங்காரமும் அதனோடே ஜாஸ்தியாகி கொண்டு வருகிறது. சாதாரணமாக படிக்கிறபையன்களிடம் ஒரு வருஷம் தன்னுடைய வகுப்பிலே நல்ல ரேங்கிலே வந்து விட்டான் என்றால் ஒருவிதமான அஹங்காரம் வந்துவிடு கிறது; எங்கள் குருவுக்கு ஒரு சமயம் நானே சொல்லிக் கொடுக்கவேண்டியிருக்கும் என்கிற வரையிலுமே அது வளர்ந்து விடுகிறது. ஆனால் ஒரு விஷயத்தை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நம் குருவுடைய ஆசீர்வாதம், பகவானுடைய கிருபை, நம்முடைய முயற்சி இந்த மூன்றினால்தான் நாம் முன்னுக்கு வருகிறோம். இதிலே எது சரியாக இல்லாவிட்டாலும் நாம் முன்னுக்கு வர முடியாது. நம்முடைய முயற்சியில்தான் முன்னுக்கு வந்து கொண்டு இருக்கிறோம்; ஈஸ்வரனும் இல்லை; குருவும் இல்லை என்று யாராவது நினைத்தால் அது மிகவும் தப்பிதம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நம்முடைய முயற்சி, அந்த குரு கிருபையும், ஈஸ்வர கிருபை யும் சேர்ந்தால்தான் பலிக்கும்; இல்லாவிட்டால் பலிக்காது. ஆகையினாலே நமக்கு எந்த பரிஸ்திதியிலேயும், அதிகம் தெரிந்தவன் என்கிற அஹங்காரம் இருக்கக்கூடாது. இன்னும் தெரிந்து கொள்ளவேண்டியது நமக்கு எவ்வளவோ இருக் கிறது. வேதத்தில் ஒரு கதை உள்ளது. ஒரு ரிஷி தான் வேதங்கள் எல்லாவற்றையும் படித்துமுடிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். ஒரு ஜென்மம் பூராவும் படித்தார்; படிக்க முடியவில்லை. மீண்டும் இன்னொரு ஜென்மம் வந்தது. ஆனால் பகவான்கிருபையினாலே போனஜென்மத்தினுடைய ஞாபகம் இருந்தது. எனவே படித்ததைவிட்டு மீதியைப் படித்து முடிக்கலாம் என்று ஆரம்பித்தார்; இரண்டாவது ஜென்மத்திலும் முடியவில்லை. மீண்டும்மூன்றாவதுஜென்மம் வந்தது. அதிலாவது முடிக்கலாம் என்று ஆரம்பித்தார்;முடிய வில்லை. அந்த ஜென்மத்தில், தொண்ணூறு வயதாகி கம்பூன்றிக்கொண்டு தள்ளாடிக்கொண்டு போகிறார். அப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

போதும் படித்துக்கொண்டு இருக்கிறார். அந்த சமயத்திலே இந்திரன் பிரத்யக்ஷமானார். இன்னொரு ஜென்மம் கொடுத்தால் என்ன செய்வீர்? என்று கேட்டார். முனிவரும், அடுத்த ஜென்மத்திலாவது வேதத்தை படித்து முடித்துவிடுவதுஎன்று தீர்மானம் செய்துவிட்டதாகக் கூறினார். இந்திரன் மூன்று பர்வதங்களை அப்போது காட்டினார். ஒவ்வொரு பர்வதத்திலேயிருந்து ஒரு பிடி மண் எடுத்து, இந்த மூன்று ஜென்மங்களில் நீ படித்தது இந்த அளவிற்கு; படிக்க வேண்டியது பர்வதங்கள் அளவிற்கு என்றுகாட்டினாராம். நாம்எத்தனை ஜென்மங்கள் எடுத்துப் படித்தாலும் இந்த சாஸ்திரத்தை படித்துமுடித்தாயிற்று என்று சொல்வதற்கு சாத்யமே இல்லை.

இதைத்தான் நமது முன்னோர்கள் ஒரு வாக்கியம் சொல்லிக்கொண்டு இருந்தார்கள்:

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

अनन्तशास्त्रं बहु वेदितव्यं, ऐपश्च कालो बहवश्च विघ्नाः ।
यत्सारभूतं तदुपासितव्यम् ।।

அனந்த சாஸ்த்ரம் பஹு வேதிதவ்யம் ஐபஸ்சகாலோ
பஹவஸ்ச விக்னா:!

யத் ஸாரபூதம் தது உபாஸிதவ்யம்!!

சாஸ்திரம் என்கிறது அனந்தம். அதற்கு எல்லையே இல்லை; சமுத்திரம் மாதிரி. நாம் படிக்கக்கூடிய சமயமோ மிகவும் சொற்பம். அந்த சமயத்திலும் இடையிலே எவ்வளவோ விக்னங்கள். எத்தனையோ நாட்களுக்கு இவனுக்கு உடம்பு சரியாய் இருக்காது. இவனுக்குச் சரியாக இருந்தால் குருவுக்கு நலம் இல்லாமல் இருக்கும். எல்லோரும் நலமாக இருந்தால், ஒரு பக்கம் போராட்டம் ஆரம்பமாகிவிடும். அதுவும் சரியாகி, பரீக்ஷை எழுதலாமென்றால், கேள்வி வெளிப்பட்டு அடுத்த பரீக்ஷை எழுத வேண்டும் என்று சொல்லிவிடுகிறார்கள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இந்த மாதிரி ஒன்றன்பின் ஒன்றாக விக்னங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. இப்படி இருக்கும்போது நாம் என்ன செய்யமுடியும்?

"यत् सारभूतं तदुपासितव्यम्"

யத் ஸாரபூதம் ததுபாஸிதவ்யம்.

இதிலே ஒரளவுதான் தெரிந்துகொள்ள முடியுமே தவிர முழுவதும் தெரிந்துகொண்டோம் என்று நாம் சொல்லவே முடியாது. ஆகவே எனக்கு எல்லாம் தெரியும் என்று எவனாவது அகங்காரப்பட்டானென்று சொன்னால் அவன்தான் அவிவேகி என்றுசொல்லப்படுவான். நம்முடைய சம்ஸ்கிருதியிலே எத்தனையோ மஹான்கள், எத்தனையோ வித்வான்கள் இருந்தார்கள், அவர்களுடைய கிரந்தங்களைப் பார்க்கிறபோது, எவ்வளவோ விநய்த்தோடே ஆரம்பித்துள்ளனர். சம்ஸ்கிருதத்திலே காளிதாஸன் என்கிற ஒரு மஹாகவி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருந்தார். அவருக்குச் சமமாக சம்ஸ்கிருத ஸாகித்யத்திலே இன்னொருவர் இல்லை என்பது பிரசித்தி. அத்தகைய அவர், பகவான் ஸ்ரீ இராமச்சந்திரனுடைய முன்னோர்களைப்பற்றி ஒரு காவியம் எழுத ஆரம்பித்தார். ராஜாக்களுடைய யோக்கியதை எவ்வளவு உயர்ந்தது! நான் மிகவும்சிறியவன்; அவர்களைப்பற்றி எழுதக்கூடிய யோக்கியதை எனக்கு எங்கே இருக்கிறது? என்னவோ, ஒரு பேராசையிலே புறப் பட்டு இருக்கிறேன் என்றார். அவரே அப்படிச் சொன்னால் மீதிப் பேருக்கு என்ன கதி? அவருடைய விநயம் அப்பேர் பட்டது. அவரே அவ்வளவு விநயத்தோடு இருக்கிறபோது, சாதாரணமானவர்களாகிய நாம் எவ்வளவு விநயத்தோடு இருக்க வேண்டும்? அப்படி நாம் விநயத்தோடு இருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் அநேகம் இருக்கிறது என்ற பாவத்தோடே இருந்தால்தான் நிறைய விஷயங்களை தெரிந்துகொள்ள முடியும். எனக்கு எல்லாம் தெரியும் என்று ஒருவன் எப்போது நினைத்தானோ, அதன்பின் அவனால்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஒரு அக்ஷரம் கூட தெரிந்துகொள்ள முடியாது. ஆகையால் மனிதனுக்கு கல்வியைக் கற்க, கற்க வரவேண்டியது விநயம்.

ஆனால் இப்பொழுது "தத் விபரீதமாய்" இருக்கிறது. வித்தையினால் விநயம் வரவேண்டியது போய், அவிநயம் வருகிறது. வித்தையிலிருந்து நமக்கு எது உண்டாக வேண்டுமோ அது உண்டாகாமல், அதற்கு விபரீதமானது உண்டாகிறது. அதற்கு நம் முன்னோர்கள் ஒரு உதாரணம் காட்டுகிறார்கள். தாய் குழந்தைக்குப் பால் கொடுப்பாள். ஆனால் ஏதாவது ஒரு தாய் குழந்தைக்கு பாலுக்குப் பதில் விஷத்தைக் கொடுத்தால், அத்தாயைப்பற்றி என்னசொல்ல! வித்தை என்பது தாயார்; அந்த தாயாராலே நமக்கு வர வேண்டியது விநயம் என்கிற அமிர்தம்; அதற்குப் பதிலாக அவிநயம் என்கிற விஷம்வந்துவிட்டால் அதுவித்தையாகுமா? அந்த வித்தையை படித்தவனும் ஒருபண்டிதனா? அதனாலே

विद्ययाविनयावाप्तिः

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"வித்யயாவிநாயாவாப்தி" என்கின்றது மிகவும்மூலபூதமான, மிகவும் உத்தமமான சூத்திரம். முன்னோர்கள் எதைச் சொல்லியிருக்கிறார்களோ, அதைப் படிக்கிறவன் ஒவ்வொரு வனும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நம்முடைய ஜீவிதத்திலே எவ்வளவோ வித்யார்ஜனம் செய்யவேண்டும். அதே சமயத்திலே பெரியோர்கள் விஷயத்திலே கௌரவ பாவத்தோடே இருக்கவேண்டும். என்னைவிடத் தெரிந்தவர் கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களிடம் நாம் தெரிந்து கொள்ள வேண்டியதுதான் அநேகம் இருக்கிறது என்கிற பாவத்துடன்தான் இருக்கவேண்டும். அப்பொழுது தான் நாம் பண்டிதர்களாக முடியும்; இன்னொருவனுக்கு உபகாரத்தையும் செய்ய முடியும்; அடுத்தவனையும் பண்டி தனாக்க முடியும். படிக்கிறவன் ஒவ்வொருவனும் இந்த விஷயத்தை முக்கியமாகத் தெரிந்து கொள்ளவேண்டும். விநயத்தோடே இருக்கவேண்டும். படிப்பில் முன்னுக்கு வர வேண்டும், தான்படிக்கும் பள்ளிகூடத்துக்கு நல்ல கீர்த்தியை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சம்பாதித்துத் தர வேண்டும். ஸ்ரீ வித்யா மந்திர் கலாசாலைகளில் படிக்கக்கூடிய மாணவர்கள் மிகவும் சிரத்தை உடையவர்களாகவும் வித்தையில் மிகவும் விருப்பம் உள்ளவர்களாகவும் இருக்கின்றார்கள் என்று தெரிந்து மிகவும் சந்தோஷப்படுகிறேன். உங்கள்எல்லோருக்கும் வித்தை நன்கு வரட்டும். அதே சமயத்தில் வித்தையினால் வரவேண்டிய விநயம் ஒவ்வொருவனுக்கும் வரட்டும். உங்களுக்குப் பாடம் சொல்லக் கூடிய உபாத்யாயர்கள், இந்த விஷயங்களை பிரதானமாகச் சொல்லட்டும். நம் பாரதிய சம்ஸ்கிருதியை பிரசாரம் செய்வதற்கு நீங்கள் எல்லோரும் முன்னுக்கு வரவேண்டும். அதற்கு வேண்டிய சக்தியை உங்களுக்கு பகவான் தரட்டும் என்று நான் பகவானைப் பிரார்த்தித்து. உங்கள் எல்லோருக்கும் என் ஆசீர்வாதங்களைத் தெரிவித்து, இந்த பள்ளியின் நிர்வாகிகளுக்கும், உபாத்யாயர்களுக்கும், வித்யார்த்திகளுக்கும் என் ஆசீர்வாதங்களைத்தெரிவித்து, இந்த பாஷணத்தை இங்கு முடிக்கின்றேன்.

ஹர நம பார்வதீ பதயே! ஹரஹர மஹாதேவ!

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இடம் :

ஸ்ரீ வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி

சிவாஜி நகர், சேலம்-636 003.

நாள்: 9-1-1988

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

प्रार्थना

शरदिन्दु विकास मन्दहासां
स्फुरदिन्दीवर लोचनाभिरामाम् ।
अरविन्द समान सुन्दराश्यां
अरविन्दासन सुन्दरीमुपासे ।।

ஸரதிந்து விகாஸ மந்தஹாஸாம்
ஸ்புரதிந்தீவர லோசனாபிராமாம்!
அரவிந்த ஸமான சுந்தராஸ்யாம்
அரவிந்தாஸன சுந்தரீமுபாஸே!!

மனிதன் தன் வாழ்க்கையில் பற்று இல்லாத பொருள் மீது பற்று வைக்கிறான். அது ஏன்?

अशादुःखस्यकारणम्

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆசையே துக்கத்திற்கு காரணம்.

पुण्यस्य फलमिच्छन्ति
पुण्यं नेच्छन्ति मानवाः ।
नपाप फलमिच्छन्ति
पापं कुर्वन्ति यत्नतः ।।

புண்யஸ்ய பலமிச்சந்தி
புண்யம் நேச்சந்தி மாணவா: !
நபாப பலமிச்சந்தி
பாபம் குர்வந்தி யத்னத: !!

(கருத்து) மனிதர்கள் புண்ணியத்தின் பலனை விரும்புகிறார்கள். ஆனால் புண்ணிய காரியங்களைச் செய்யவிரும்பவில்லை. பாபத்தின் பலனை விரும்பாத மக்கள் முயற்சி செய்து பாபகாரியங்களைச் செய்கிறார்கள். ஆகவே, பெரி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யோர்கள் ஒவ்வொருவரும் குழந்தைகளுக்கு இளமைக்காலம் முதற்கொண்டே நல்ல பழக்க வழக்கங்களைப் புகட்ட வேண்டும்.

அதை negative form ல் (எதிர்மறை முறையில்) கூறாமல் அறிவுறுத்த வேண்டும். காலத்தில் சிறந்தது उषःकालम् (உஷக் காலம்) விடியற்காலை.

निर्दिष्टां कुलपतिना सपर्णशालाम्
अध्यास्य प्रयत-परिग्रह द्वितीयः ।
तच्छिष्याध्ययन निवेदितावसानाम्
संविष्टः कुशशयने निशांनिनाय ॥
(रघु 2-95)

கல்வி கற்பதற்குச் சிறந்த நேரம் வைகறைப் பொழுதேயாகும். கவிகளுள்சிறந்த கவியான "காளிதாஸன்" தனது படைப்பான ரகுவம்ஸத்தில் விளக்கியுள்ளார். வசிஷ்டரின்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆஸ்ரமத்தில் இரவு தங்கியிருந்த "திலீப மன்னன்" வசிஷ்டரின் மாணவர்களது வேதாத்யயன ஒலியைக்கேட்டு பொழுது விடியப் போகிறது என்பதை அறிந்துகொண்டான் என்று அந்த சந்தர்ப்பத்தை (அதாவது விடியற்காலை நேரத்தை) நமக்கு கவி அறிவுறுத்துகிறார். மற்றும் ஒரு ஸ்லோகம் மூலமாகவும் இதைத் தெரிவிக்கிறார்.

अतिथिं नाम काकुस्थात् पुत्रं प्राप कुमुद्वती ।
पश्चिमाद्यामिनीयामात् प्रसादमिवचेतना ।।

(கருத்து) ஒரு இரவின் கடைசிப் பகுதியைத்தான் விடியற்காலை அதாவது उषःकालम् என்கிறோம். அந்தச் சமயத்தில்தான் மனிதர்களின் புத்தி மிகமிக தெளிவுள்ளதாக இருக்கும். ஆகவே அந்தச் சமயத்தில் அலாரம் வைத்தாவது எழுந்திருந்து குழந்தைகளைப் படிக்கும்படி தூண்டவேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

अपर रात्र प्राप्त बुद्धि प्रसादाः कवयः

(கருத்து) விடியற் பொழுதில் அறிவைப் பெற்றவர்கள் கவிஞர்களாகத் திகழ்வார்கள். மேலும், இவ்வுலகில் சில மக்கள் சிறிதும் முயற்சி செய்யாமல் உயர்ந்த பலனை அடைய ஆசைப்படுகின்றனர். உதாரணமாக, ஒரு மாணவன் தான் சிரமமின்றி முதல் வகுப்பில் பாஸ் செய்ய வேணும் என்று ஆசைப்படுகிறான். இது சாத்யமான காரியமா? அல்ல; இது மிகவும் தவறு. முயற்சித்தே நல்ல பலனை அடைய வேண்டும். இதற்கு உதாஹரணம்:- நான் இதற்கு முன் இந்தப் பள்ளிக்கு வந்துள்ளேன். அப்போது இருந்த நிலைக்கு இப்போது சிறந்த முன்னேற்றம் அடைந்துள்ளது. அதற்குக் காரணம் நிர்வாகத்தின் சிறந்த முயற்சியே ஆகும்.

மேலும் நீங்கள் எல்லோரும் உயர்ந்த நிலைக்கு வரவேண்டும். அதற்கு வேண்டிய சக்தியை உங்களுக்கு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பகவான் தரட்டும். அதற்காக நான் பகவானைப் பிரார்த்திக் கிறேன். உங்கள் எல்லோருக்கும் என் ஆசீர்வாதங்களைத் தெரிவிக்கிறேன். இந்தப் பள்ளியின் நிர்வாகிகளுக்கும், ஆசிரியர்களுக்கும், வித்யார்த்திகளுக்கும் என் ஆசீர்வாதங்கள்.

"சுபம் பூயாத்"

ஹரநம பார்வதி பதயே! ஹரஹர மஹாதேவ.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

Never be morose.
Always be cheerful.
Say "Namaste" to your
teachers as soon as you
meet them.
Learn good manners
in the school.
If you have good manners
everybody will love
and respect you.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

If any friend or guest or relative comes to your house say "Namaste"
Say, "Please come, please take your seat".
Always use the right hand to give or take anything.
Be free with the guest and win their love.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

Before you start your studies pray to God thus: "Oh Lord, give me good memory".

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

Touch the feet of your parents before you go to school everyday and seek the blessings.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அஜந்தா பிரஸ், சேலம்-2. தொலைபேசி: 52437

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,